<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 141/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | A.R.மாதேசன் | நாள் | 27.06.2023 |
| தகப்பனார் பெயர் | ராமசாமி | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணைதொடர்ச்சி:–</u>

10) என் வழக்குரை மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் நான் சொல்லியுள்ளது போல் கடந்த 15.07.2017 ம் தேதியில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் எவ்வித கம்பிவேலியும் அமைக்க முயற்சி செய்யவில்லை என்றாலும், மேற்படி சங்கதிகள் வழக்குமூலத்திற்காக நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும், சரியல்ல.

11) அவ்வாறு மேற்படி 15.07.2017 ம் தேதியில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக நான் காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்தேனா என்றால், புகார் அளித்தேன். ஆனால், காவல்துறையினர் இது சிவில் வழக்கு என்பதால், என் புகாரை காவல்துறையினர் ஏற்க மறுத்துவிட்டனர்.

12) போலீசார் மேற்படி சம்பவம் தொடர்பாக நான் அளித்த புகாரை வாங்க மறுத்துவிட்டனர் என சொல்லும் நிலையில், அந்த புகார் நகலினை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

13) என் தோட்டத்திற்கும், வீட்டிற்கும் மேற்கே குரும்பனூர் செல்லும் தார்சாலை உள்ளது என்றால், சரிதான். என் சொத்திற்கு சென்று வருவதற்கு நான் மேற்படி தார்ரோட்டை தான் தடவழியாக பயன்படுத்தி வருகிறேன் என்றால், சரியல்ல. ச.எண்.955/2 ல் உள்ள நிலத்தின் வழியாகத்தான் நான் என்னுடைய சொத்திற்கு சென்று வருகிறேன்.

14) அவ்வாறு ச.எண்.955/2 ல் உள்ள நிலத்தின் வழியாக நான் செல்வது பொய்யானது என்றாலும், என் தோட்டம் மற்றும் வீட்டிலிருந்து மேற்படி மேற்குபுறம் உள்ள குரும்பனூர் தார்சாலையை அடைவதற்கு மேற்குபுறமாகவே வழி உள்ளது என்றால், சரியல்ல. அது வேறொருவருடைய நிலம். நான் சொல்வது போல் மேற்படி மேற்குபுறம்

உள்ள நிலம் நான் சென்று வரும் தடவழி என்றாலும், அது வேறொருவருக்கு பாத்தியப்பட்டது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

15) தாவா 2–வது அயிட்ட சொத்தில் 15 தென்னை மரங்கள் உள்ளது என்றால், சரிதான். என் தாத்தா சின்னப்ப கவுண்டருக்கு அந்தோனிமுத்து என்பவர் இந்த தாவாவில் உள்ள 1–வது அயிட்ட சொத்தை விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி 1–வது அயிட்ட சொத்திற்கு கிழக்குபுறம் உள்ள நிலத்தை மேற்படி அந்தோனிமுத்து என்பவர், பழனியம்மாள் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி பழனியம்மாளுக்கு விற்பனை செய்த சொத்திற்கு தெற்குபுறமுள்ள நிலத்தை மேற்படி அந்தோனிமுத்து, அவரது சகோதரரான செல்வநாயகம் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான்.

16) மேற்படி பழனியம்மாள் கிரயம் பெற்ற சொத்திற்கு வடக்கு புறம் தான் பூசாரி கவுண்டரின் சொத்து உள்ளது என்றால், சரிதான். மேற்படி பூசாரி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர்களது குடும்பத்தினர் 1986 ம் வருடத்திலேயே பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால், சரிதான்.

17) மேற்படி பூசாரி கவுண்டர் மகன் ஒண்டிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தில் உள்ள வீடு தாவா 2–வது அயிட்ட சொத்திற்கு கிழக்கு புறம் உள்ளது என்றால், சரிதான். மேற்படி வீட்டில் தற்போது மேற்படி ஒண்டியின் மனைவி சின்னமாரி தான் வசித்து வருகிறார் என்றால், சரிதான்.

18) மேற்படி ஒண்டியின் மனைவி சின்னமாரி மற்றும் அவரது வாரிசுகள் அனைவரும் மேற்படி வீட்டை தவிர ஒண்டிக்கு பாகமாக கிடைத்த சொத்துக்களை 13.04.2010 ம் தேதிய கிரய ஆவண எண்.602/2010 ன் படி ஒரு ரேவதி என்பவருக்கு விற்றுவிட்டனர் என்றாலும், மேற்படி நிலத்தை கிரயம் பெற்ற ரேவதி இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதி செல்வி என்பவருக்கு விற்றுவிட்டார் என்றால், ரேவதியிடமிருந்து செல்வி கிரயம் பெற்றுள்ளது உண்மைதான். ஆனால், மேற்படி சொத்தை ஒண்டி குடும்பத்தாரிடமிருந்து ரேவதி கிரயம் பெற்றார் என்பது தவறானதாகும். ரேவதி மேற்படி

சொத்தை வேறொரு நபரிடமிருந்து கிரயம் பெற்று அதைதான் 1ம் பிரதிவாதி செல்விக்கு விற்றுள்ளார்.

19) வேறு நபரிடமிருந்து கிரயம் பெற்றதாக நான் சொல்லும் நிலையில், மேற்படி நபர் யார் என்றால், ஒண்டியின் அண்ணன் முனியன் (எ) முனியப்பன் என்பவரிடமிருந்துதான் ரேவதி மேற்படி சொத்தை கிரயம் பெற்றார். நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி முனியன் (எ) முனியப்பன் தனக்கு பாகமாக கிடைத்த நிலத்தை கடந்த 29.01.2002 ம் தேதியில் ஒரு பார்த்தசாரதி என்பவருக்கு தான் விற்பனை செய்துள்ளாரே தவிர, செல்விக்கு விற்பனை செய்யவில்லை என்றால், சரியல்ல. அவர் பார்த்தசாரதிக்கு விற்பனை செய்தது குறித்து எனக்கு தெரியாது.

20) 1986ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்திலும், 2002 மற்றும் 2010ம் வருடங்களுக்குரிய கிரய பத்திரங்களிலும் சொத்து விவரத்தில் தெற்கு பகுதியில் பழனியம்மாளின் நிலம் உள்ளதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், நான் சொல்வது போல் வழிதடம் உள்ளதாக எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றால், மேற்படி பத்திரங்களை நான் பார்த்ததில்லை. அதில் என்ன பதிவு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு எதுவும் தெரியாது.

21) 1ம் பிரதிவாதியின் சொத்தை நான் குறைந்த விலைக்கு விற்க கேட்டு அதை பிரதிவாதிகள் மறுத்துவிட்டதால், பகையுணர்வு கொண்டு பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்யவேண்டும் என்ற தவறான எண்ணத்தில் பொய்யான சங்கதிகளுடன் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் செலவு தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், சரியல்ல.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.